# வேதார்த்த ஸங்க்ரஹம்
# (ஸாரம்)

**ஸ்ரீ உ.வே. கோயில் வித்வான் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்**

இருள் தருமாஞாலமான இவ்வுலகில் நாம் அநுபவிக்கும் இன்பங்கள் அல்பமானவை அஸாரமானவை. நிலையில்லாதவை. துன்பங்கலந்தவை. ஆத்மாவுக்கு ஸ்வரூபம் நாசம் ஏற்படுத்துமவை. இந்த சேதனன் ப்ரஹ்மாநுபவத்துக்குரியவன். அதை அடைய உபாயம் வேதாந்தஜ்ஞானம் அந்த வேதாந்தஜ்ஞானம் ப்ரஸ்தான த்ரயத்தை ஆசார்யனிடம் கேட்டறிந்தால் ஏற்படும்.

ப்ரஸ்தானத்ரயமாவது (1) ப்ரஹ்மஸூத்ரபாஷ்யம் (2) உபநிஷத்பாஷ்யம், (3) கீதா பாஷ்யம். சங்கரரும் ஆனந்த தீர்த்தரும் உபநிஷத்துக்கு பாஷ்யம் (விரிவுரை) எழுதியுள்ளனர். நம்முடைய ஸ்வாமி எம்பெருமானார் உபநிஷத்துக்களுக்கு விரிவுரை அருளிச்செய்யவில்லை. ஆதலால் முக்கியமான வேதாந்த வாக்கியங்களை ஆராய்ந்து ஜ்ஞானத்தை அருளியுள்ளார். அந்தஜ்ஞானத்தை அளிக்கும் நூல் வேதார்த்தஸங்க்ரஹம். அதாவது வேதங்களின் அர்த்தங்களின் சுருக்கம் என்றோ வேதாந்த அர்த்தங்களின் சுருக்கமென்றோ இதற்குப் பொருள் கொள்ளலாம். நவரத்தினங்கள் போன்ற எம்பெருமானார் அருளிச்செய்த க்ரந்தங்கள் ஒன்பதில் ஒன்றாகும்.

எம்பெருமானார் ஆரம்பத்தில் அருளிய மங்களச்லோகம்.

(1) अशेषचिडचिहस्तुशेषिणे शेवशायिने

निर्मलानन्दकलयाण निघये विष्णवे नम: ।।

சேதநாசேதநங்களுக்கு ஸ்வாமியாய் திருவனந்தாழ்வானில் சயனித்திருப்பவனாய் தோஷங்களில்லாதவனாய் கல்யாண குணங்களின் புதையலாய் - அனைத்துப் பொருள்களிலும் ஆத்மாவாய் பரந்திருக்கும் பரதேவதையான நாராயணனுக்கு உரிய நான் எனக்கு உரியவனல்ல. அசேஷ சிதசித்வஸ்துசேஷிணே - சேஷசாயிநே - உபய விபூதியை உடையவன்

என்றும் சேதநாசேதனங்களுக்கு ஸ்வாமி என்றதால் சேதநாசேத ஈச்வர பேதமும் நிர்மல...நிதயே என்று உயர்வற உயர்நலமுடையவன் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(२) परं ब्रह्मैवाज्ञं भ्रमपरिगतं संसरति तत्
परोपाध्यालीढं विवशं अशुभस्यास्पडमिति ।
श्रुतिन्यायापेतं जगति विततं मोहनमिडं
तमो येनापास्तं स हि विजयते यामुनमुनि: ॥

ப்ரஹ்மம் தவிர எதுவுமில்லை. எல்லாம் பொய்.

(அ) ப்ரஹ்மம் அவித்யையுடையது. அவித்யையால் மறைக்கப்பட்டது. அவித்யையால் பலபொருள்கள் கற்பிக்கப்படுகிறது. ப்ரஹ்மம் ப்ரமமுள்ளது. ஜந்ம மரண முதலிய துக்கங்களை அநுபவிக்கிறது.

(ஆ) ப்ரஹ்மமே உண்மை. மற்றவை உடல் இந்த்ரியங்கள் ஆகிய உபாதியால் பேதத்தை அறிகிறது.

கர்மவயப்பட்டது. அசுபங்களுக்கு இருப்பிடம் என்று சொல்லப்படுகிற அஜ்ஞான இருளைப் போக்கி பொலிவுடன் விளங்குகிறார் யாமுனார்யர் என்கிற ஆளவந்தார். அவரை வணங்குகிறேன்.

மேல் உள்ளவை இதன் விவரணமாகவே அமைந்துள்ளது.

**I. சங்கரமதம்**

(1) ப்ரஹ்மம் திருமேனி குணம் விபூதி என்கிற யாதொரு விசேஷமுமில்லாத ஜ்ஞானமாக இருப்பது ஸ்வயம்ப்ரகாசம்.

(2) அந்தப்ரஹ்மம் அவித்யை (அஜ்ஞானம்) யினால் மறைக்கப்பட்டு விபரீதஜ்ஞானமடைந்து பல பொருள்களை (பேதம்) அறிகிறது.

(3) ப்ரஹ்மமொன்றே ஸ்வயம் ப்ரகாசமானது. அதுவே உண்மையானது - மற்றுயாவும் பொய் - அவித்யையால் தோன்றுகிறது.

**II. பாஸ்கரமதம்**

(1) ப்ரஹ்மம் யாதொரு விசேஷமுமில்லாததல்ல. குணமுண்டு. (2) புத்தி, இந்த்ரியம் தேஹம் முதலிய ஸத்யமான உபாதி சம்பந்தத்தால் தன்னை ஜீவனாக ப்ரமித்து, ஜன்மமரண துக்கங்களை அடைகிறது.

**III. யாதவப்ரகாசமதம் :**

(1) ப்ரஹ்மமே சித்தாகவும் அசித்தாகவும் பரிணாமம் (மாறுபாடு) அடைகிறது.

(2) சேதனன் அசுபமானவன். அபுருஷார்த்த சம்மந்தமுள்ளவன்.

(3) அசேதனம் அசுபம். மாறுபாடு அடையக்கூடியது.

(4) தன்னை விடவே வேறு இல்லாதவற்றை வேறு என்று எண்ணி பிரமிக்கிறது. அதனால் ஸம்ஸாரத்தில் ஜனன மரண துக்கங்களை அடைகிறது.

**மீமாம்ஸகமதம் :**

**I. பாட்டமதம்**

அ. கர்மம் என்பது தேவதைகளைக் குறித்துஹவிஸ்ஸை அளித்து பலம் பெற உபாயமாயிருப்பது.

ஆ. அவைகள் புத்ரபசு அன்னம் மழை ஸ்வர்க்கம் முதலிய அற்பமான, அஸ்திரமான பலத்தை அளிக்கின்றன.

இ. தேவதைகள் கிடையாது. அதாவது தேவதைகளுக்கு உருவம். ஹவிஸ்ஸை வாங்கிக் கொள்ளுதல் பலகர்மங்கள் நடக்கும் இடங்களுக்கு ஒரே காலத்தில் வருதல் இவைகள் இல்லை.

ஈ. கர்மமே பலமளிக்கிறது.

**II. ப்ராபாகரமதம்**

(1) கர்மம் பலமளிக்கிறதில்லை. அபூர்வம் (अपूर्व) ப்ராபாகரரின் கல்பனை) பலனளிக்கிறது.

இவ்விதம் வேதோகிலோ தர்மமூலம் - வேதா: ப்ரமாணம். ஆதௌவேதா: ப்ரமாணம் என்கிறபடியே பரமப்ரமாணமான வேதங்களுக்கு விரோதமான கருத்துக்களைக் கூறும் மதங்களைக் கண்டித்து விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை அறுதியிடுகிறார்.

तत् त्वं असि என்பது சாந்தோக்ய உபநிஷத் வாக்யம். அத்வைதி இதற்கு அந்தப்ரஹ்ம் நீயே நேதி நேதி என்று வேதம் கூறுவதால் ப்ரஹ்மம் ஒன்று தவிர மற்றவை இல்லை பொய். ப்ரஹ்மம் ப்ரமிக்கிறது. அதாவது கிளிஞ்சலைப் பார்த்து வெள்ளி என்று தவறாக நினைக்கிறான். இதில் கிளிஞ்சல் உண்மை வெள்ளி பொய். சித்துமில்லை. அசித்துமில்லை. ப்ரபஞ்சமும் பொய், ப்ரஹ்மம் அவித்யையினால் மறைக்கப்படுகிறது. இல்லாத சேதநாசேதனமயமான ப்ரபஞ்சத்தை இருப்பதாக நினைக்கிறது. கிளிஞ்சலைப் பார்த்து வெள்ளி என்று ப்ரமிக்கிறது. உடனே नेद रजतं (நேதம் ரஜதம்) என்று ரஜதம் என்ற எண்ணம் நீங்குகிறது. பொய்யாகிறது. அதுபோல் ப்ரஹ்மம் அவித்யையால் ப்ரமித்து பொய்யான உலகத்தை உண்மை என நினைத்து भेद-दर्शनं பண்ணுகிறது. ப்ரஹ்மத்தின் भेददर्शन த்துக்கு அவித்யைதான் காரணம். அந்த அவித்யை நீங்குவது तत् तत्त्वमसि முதலிய ப்ரஹ்ம - ப்ரபஞ்ச ஐக்யமாகிற அத்வைதஜ்ஞானத்தால்

तत् - ஸர்வஜ்ஞத்வ ஸர்வசக்தித்வம் முதலிய பல குணங்களோடு கூடிய ப்ரஹ்மமாக

त्वं - அஜ்ஞானம் அசக்தி முதலியவற்றோடு கூடிய ஜீவன்.

असि - இருக்கிறாய் என்று பொருள் கொண்டால் ஒன்றுக்கொன்று வேறுபட்ட ப்ரஹ்மம் ஜீவன் என்கிற இரண்டு வஸ்து ஒன்றாக முடியாது. ஆகையால் ஸர்வஜ்ஞத்வம் முதலிய விசேஷங்களை விட்டு ப்ரஹ்மம் என்று மட்டும் त्वं ஜீவன் மட்டும் என்று பொருள் கொள்ள வேண்டும். நீயே ப்ரஹ்மமாக இருக்கிறாய். என்று பொருள் கொள்வதே உசிதம். ப்ரஹ்மம் தவிர்த்து மற்றவை பொய் - பரமாத்மாவே தன்னை ஜீவன் என்று நினைக்கிறான். ப்ரஹ்ம - ஜீவ - ஐக்யம் கூறும் வாக்கியத்தால் ஏற்படும் ஜ்ஞானதிதால் விலகுகிறது. கிளிஞ்சலை வெள்ளி என்ற ப்ரமம் இதுரஜதம் (வெள்ளி) இல்லை என்ற ஜ்ஞானத்தால் விலகுவதுபோல.

நம் ஸ்வாமி எம்பெருமானாரின் கண்டனம் அவினித்யையால் ப்ரஹ்மம் ப்ரமிக்கிறது என்பதை பலவிதமாகக் கண்டிக்கிறார்.

(அ) அவத்யை ப்ரஹ்மத்தை மறைக்கிறது என்பத பொருந்தாது.

மறைப்பது என்றால் ஸ்வயம் ப்ரகாசமான ப்ரஹ்மத்தின் ப்ரகாசத்தைத் தடுப்பதாகும். ப்ரஹ்மம் தானே ப்ரகாசம். அதை மறைத்தால் ப்ரஹ்மமே இல்லையாகிவிடும்.

(ஆ) அவித்யை என்பதே நிலைக்காது.

(1) அவித்யை உண்மையா? பொய்யா? உண்மையானால் எல்லாம் பொய் என்கிற உங்கள் மதக்கொள்கைக்கு விரோதமாகும்.

(2) பொய் என்றால் ப்ரஹ்மத்தை மறைக்க முடியாது. பொய்யான ஜலம் தாகத்தைத் தனிக்காதல்லவா?

ஆகவே, तत् ஸர்வஜ்ஞத்வம் ஸர்வசக்தித்வம், ஸர்வாயதநத்வம் முதிய குணங்களோடு கூடிய அந்த ப்ரஹ்மமாக

त्वं அஜ்ஞனாய் அசக்தனாய் உள்ள நீ असि இருக்கிறாய் என்று பொருள் கொள்வதே உசிதம்

கேள்வி : அஜ்ஞனமான வஸ்து ஸர்வஜ்ஞமாக முடியாதே

பதில் : விரோதமாகுமே என்று நினைக்க வேண்டாம்.

A. வேதம் எல்லா சேதநாசேதனங்களையும் ப்ரஹ்மத்திற்கு சரீரம் என்கிறது.

यस्य पृथिवी शरीरं என்று தொடங்கி यस्य आत्मा शरीरं என்னுமளவாக அசேதனங்களையும் சேதனங்களையும் சரீரம் என்கிறது. ஜீவன் சரீரம் - பரமாத்மா சரீரி.

காணும் உடலுக்கு ஒரு ஆத்மா இருப்பதுபோல ஆத்மாவை உடலாக்கி அதனுள்ளே

பரமாத்மா ஆத்மாவாக இருக்கிறான்.

அஜ்ஞனாய் அசக்தனாய் உள்ள உன்னை சரீரமாக உடைய ஆத்மா ஸர்வஜ்ஞமாய் ஸர்வசக்தமாய் ஸர்வாதாரமான பரப்ரஹ்மம் என்று பொருள் ஏற்படுகிறது.

II. பஞ்சபூதங்களாலான சரீரத்திற்குள்ள இளமை வாலிபம் முதுமை முதலிய தோஷங்கள் உடலினுள் உள்ள ஜீவாத்மாவுக்கு வாராதாப்போலே சரீரமான சேதனாசேதனங்களுடைய தோஷம் ப்ரஹ்மத்திற்கு வராது. இவ்விதமான ஸமந்வயம் ஸாமாநாதிகரண்யம் கொண்டு செய்கிறார்.

III. सामानाधिकरण्य மான அனேக விசேஷமுள்ள பதார்த்தங்களோடு கூடிய ஒரே பொருள்; அல்லது வெவ்வேறான பொருள்கள் எல்லாம் ஒரே பொருளைக் குறிப்பது ஆகும்.

I. नीलो घट: கருப்பான குடம். நிறமும், குடமும் ஒரே பொருளாகக் காட்டப்பட்டுள்ளது.

II. ब्रह्मा च नारायण: शिवश्य नारायण: போன்றவை

நம்மாழ்வார்

நிடவிசும்பெரிவளி நீர் நிலமிவைமிசை

படர்பொருள் முழுவதும் அவையளவதோறும் உடன்மிசையுயிரெனக்கரந் தெங்கும் சுடர்மிகு சுருதியுள் இவையுண்டசுரனே.

2. நீராய் நிலனாய் தீயாய் காலாய் நெடுவானாய்

சீரார் சுடர்களிரண்டாய் சிவனாய் அயனானாய்.

இவர்கள் प्रत्यक्ष த்தை இரண்டாகப் பிரித்துச் சொல்லுகிறார்கள்.

1. निर्विकल्पकप्रत्यक्षம்

2. सविकल्पकप्रत्यक्ष ம்

நிர்விகல்பம் : முதலிய ஒரு பொருள் மட்டும் யாதொரு விசேஷமில்லாமல் தோன்றுவது.

ஸவிகல்பகம் : அடுத்துக் காணும்போது ஒரு பொருள் விசேஷங்களோடு தோற்றுவது.

முதலில் நிர்விசேஷ - சிந்மாத்ரப்ரஹ்மம் மட்டும் தோற்றுகிறது.

மற்ற விசேஷங்கள் தோன்றுமவை அவித்யையினால் கற்பிக்கப்பட்டவை என்கிறார்கள். ஜ்ஞானம் (ப்ரத்யக்ஷம்) என்றால் நிர்விசேஷமாகவே தோன்றாது. ஜ்ஞானம்

உண்டாகும்போது கர்த்தா (எழுவாய்) கர்ம (செயப்படு பொருள்) இவைகளோடுதான் தோன்றுகிறது. உதாரணம்

(1) अहं धावामि (நான் ஓடுகிறேன்)

(2) कुलाल: घटं कयोति: (குயவன் குடத்தைச் செய்கிறான்)

இரண்டாவதாக ஞானம் ஏற்படும்போது பொருள் விசேஷங்களோடு அறிவதற்குக் காரணம் நிர்விகல்பகம். முதலில் நிர்விகல்பத்தில் விசேஷமே இல்லாதிருந்தால் ஸவிகல்பகத்தில் எப்படித் தோன்றும்?

(3) ஜாதி என்பது கண்ணுக்குப் புலப்படாதது.

குடத்தில் घटत्वं என்ற ஜாதி உள்ளது

பசுவில் गोत्वं என்ற ஜாதி உள்ளது.

பிராமணனில் ब्राह्मणत्वं என்ற ஜாதி உள்ளது.

இது अयं घट: अयं घटे: என்று தொடர்ந்துவரும் ஞானத்தாலே அறியப்படுகிறது என்ற கொள்கை தவறு.

ஜாதி என்பது உருவ அமைப்பு.

முதலில் பசுவைப் பார்க்கும்போது கொம்பு, கழுத்துச் சதை இவைகளைப் பார்க்கிறான். श्यं गौ: இது பசு என்றால் ஜ்ஞானம் ஏற்படுகிறது வேறு ஒரு பசுவைப் பார்க்கும்போது அதே உருவ அமைப்பைப் பார்த்து इयं गौ: என்ற ஞானமேற்படுகிறது.

**பாஸ்கரமத கண்டனம்**

1. ப்ரஹ்மம் தவிர வேறு பொருள் ஏற்காமையால் உபாதிஇல்லை.
2. உபாதியின் தோஷங்கள் ப்ரஹ்மத்திற்கு வருமாகையாலும்
3. அபஹதப்ப்மா விஞ்ரோவிம்ருத்யு: போன்ற ச்ருதிகளுக்கு விரோதம் வரும். அம்மதமும் விடத் தக்கதே.

யாதவப்ரகாசமதம் கண்டனம்

1. ப்ரஹ்மமே ப்ரபஞ்சமாக பரிணாமம் அடைகிறது என்றால்,
2. விகாரம் ப்ரஹ்மத்திற்கு வரும் अविकाराय शुद्धाय என்பவை போன்ற வாக்யங்களோடு விரோதம் வரும்.

மீமாம்ஸகமதகண்டனம்

1. கர்மம் அசேதனம். அது பலமளிக்காது.
2. கர்மம் என்பது பகவானுடைய ஆராதனமாகும். அதனாலே கர்மங்களால் ஆராதிக்கப்பட்ட பகவான் மகிழ்ந்து பலமளிக்கிறான்.
3. फलमत उपपत्ते: என்கிறப்ரஹ்மசூத்ரம்

अत: இந்தப்ரஹ்மத்திரடமிருந்தே

फलं பலமேற்படுகிறது

उपपते: தேவதாராதனமாகையாலே யாக உபாஸநங்கள் ஆராதனத்தால் மகிழ்ந்த பகவான் பலமளிக்கிறான் என்பதே பொருந்தும் என்று கூறுகிறது.

यो यो यां यां तनुं भक्त: श्रद्धयाऽर्चितु मिच्छत्ति
तस्य तस्याचलां श्रद्धां तामेव विदघाम्यहं ।। என்ற கீதாச்லோகமும் இதையே கூறுகிறது.

ப்ரபாகரமதகண்டனம்

1. அபூர்வம்பலமளிக்கிறது என்றால் அபூர்வம் என்றால் என்ன என்று கேள்வி கேட்டால் நிருபிக்க முடியாது.
2. கர்மாராதிதனான பகவானே பலமளிக்கிறான். பகவானுக்கு திருமேனி உண்டு.

य एषो अन्तरादित्ये हिरण्मय: पुरुष: हिरण्य केश:.... कप्यास पुण्हरीकमेवमक्षिणी ।

ख) नीलतोयऽमध्यस्या विद्युल्लेखेन भास्वए ।

ग) तस्य माहारजतं वास: என்கிற ச்ருதிகளாலே கூறப்படுகிறது.

குணம் :

ஸத்ய காம: ஸத்யஸங்கல்பம்
மநோமய: பாருப: என்று ச்ருகுணம் கூறுகிறது.

பிராட்டி உண்டு என்று ச்ருதிகளைக் கொண்டு நிருபிக்கிறார்.

(1) अस्य ईशानांजगत: निष्णुपत्नी

(2) ह्रीश्च ते लक्ष्मीश्य यत्न्यौ

பரமபதம் :

அத்வைதி ப்ரஹ்மம் எங்கும் எல்லாவிடத்தும்

எல்லாப் பொருளிலும் வ்யாபித்து இருக்கிறது.

அதை இங்கேயே அடையலாமே? பரமபதம்
போய் அநுபவிக்க வேண்டியதில்லை என்கிறார்கள்.

பதில் (ஸ்வாமி) ச்ருதிகளைக் கொண்டு அறுதியிடுகிறார்.

1. தத்விஷ்ணோ : பரமம் பதம் ஸதாபச்யந்தி சூரய:

2. க்ஷயம் தம் ரஜஸ: பராகே.

3. ஆதித்ய வர்ணம் தமஸ: உள்ளதைக் கூறுகின்றன.

4. அஸ்மாத் சரீராத் ஸமுத்தாய பரஜ்ஞ்யோதி ரூபஸம்பத்ய ஸ்வேத ரூபேணாபி நிஷ்பத்யதே.

என்று ஒரு தேசவிசேஷமம் போல் தன்ஸ்வரூபத்தோடு ஆவிர்பவித்து सोऽश्नुते सर्वान कामान् குணானுபவம் செய்கிறான் என்று சொல்வதாம்,.